**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075281

C

1. District மாவட்டம் : புதுக்கோட்டை PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 01/2022 Date: நாள் 21.02.2022

2. (i) Act சட்டம்: } இந்திய தண்டனைச் சட்டம். { Sections பிரிவுகள்: 465, 466, 468, 471, 477
(ii) Act சட்டம்: } Sections பிரிவுகள்: 477(A), 167, 409, 420.
(iii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988. Sections பிரிவுகள்: 13(1)(c) r/w 13(2)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : ஊழல் தடுப்புச் சட்டம் (திருத்தம்) 2018. 13(1)(a) r/w 13(2)

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2014 Date to : நாள் வரை 2015 மற்றும்
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 2016 Time to : நேரம் வரை 2019
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.02.2022 Time : நேரம் 16.30 மணிகள்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக விரிவு அறிக்கை மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கந்தர்வக் கோட்டை ஒன்றியம், இளந்தூர் ஊராட்சி - 60.கி.மீ வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. பீட்டர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அருளானந்தம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.01.1972 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, புதுக்கோட்டை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J. JAWAHAR Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21.02.2022.

Name: பெயர் அ. பீட்டர்
Rank: நிலை காவல் ஆய்வாளர்
அ.கு.த.பிரிவு,
புதுக்கோட்டை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண். 01/2022 சட்டப்பிரிவுகள். 465, 466, 468, 471, 477, 477(A), 167, 409, 420 IPC and u/s 13(1)(c) r/w 13(2) of Prevention of Corruption Act-1988 and u/s 13(1)(a) r/w 13(2) of Prevention of Corruption (Amendment) Act-2018.</u>

<u>எதிரிகளின் பட்டியல் :-</u>

| | |
|---|---|
| 1) | திருமதி.ஜெ. ரோஸ்லின், வயது 59/2022, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 2) | திரு.அ.முத்து, வயது 64/2022 முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 3) | திரு.எஸ்.ரவிச்சந்திரன், வயது 61/2022, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 4) | திரு.கு.ஆறுமுகம், வயது 59/2022, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 5) | திரு.எஸ்.எஸ்.வி.ஏ.மகாலிங்கம், வயது 60/2022, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 6) | திரு.து.குமரன், வயது 59/2022, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 7) | திரு.என்.காமராஜ், வயது 56/2022, முன்னாள் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 8) | திருமதி.ரெ.சண்முகாதேவி, வயது 51/2022, முன்னாள் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 9) | திரு.எஸ்.மயில்வாகணன், வயது 38/2022, முன்னாள் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 10) | திரு.எம்.இளங்கோ, வயது 63/2022, முன்னாள் உதவிப்பொறியாளர், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 11) | திரு.எம்.சிவபிரகாசம், வயது 54/2022, உதவிப்பொறியாளர், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 12) | திரு.ஜி.சுரேஷ், வயது 53/2022, முன்னாள் ஒன்றியப் பணிமேற்பார்வையாளர், குளத்தூர் ஊராட்சி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 13) | திரு.சை.சபியுல்லா, வயது 48/2022, முன்னாள் ஒன்றியப் பணி மேற்பார்வையாளர், குளத்தூர் ஊராட்சி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 14) | திரு.ராஜமாணிக்கம் வயது 53/2022, ஊராட்சி செயலாளர்,குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம். |
| 15) | திரு.சி.மகாதேவன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், குளத்தூர் ஊராட்சி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.<br>(தனி நபர்) |

(அ.பீட்டர்) 2021

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு விழிப்பு அறிக்கை எண்.05/2021-ன்படி (Vigilance Report) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குளத்துார் ஊராட்சியில் கடந்த 2014-2015ஆம் நிதியாண்டில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் (IAY) கீழ் 2 பயனாளிகளுக்கும், கடந்த 2016 முதல் 2019 வரையுள்ள நிதியாண்டுகளில் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா PRADHAN MANTRI AWAAS YOJANA-GRAMIN (PMAY-G) திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கும் வீடு கட்டாமலேயே, வீடு கட்டி முடித்ததாகவும் அதற்குரிய சிமெண்ட் மற்றும் கம்பி ஆகியவை வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிரிகள் 1 முதல் 15 வரை உள்ளவர்கள் அவர்கள் பணிபுரிந்த காலக்கட்டத்தில் பொய்யான ஆவணங்கள் தயார் செய்து, வீடுகள் கட்டுவதற்கான மொத்த தொகை ரூ.17,70,000/-ஐ கையாடல் செய்து அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்ற விழிப்பு அறிக்கையின் விபரம் பின்வருமாறு:-

மார்ஜீனில் கண்ட எதிரி-1 திருமதி.ஜெ.ரோஸ்லின் என்பவர் கடந்த 01.04.2014 முதல் 06.08.2014 வரை கந்தர்வக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்துள்ளார். தற்போது 31.09.2019ஆம் தேதி முதல் பணி விருப்ப ஒய்வு பெற்று, பணி ஒய்வில் இருந்து வருகிறார். எதிரி-2 திரு.அ.முத்து என்பவர் கடந்த 07.08.2014 முதல் 03.03.2016 வரை கந்தர்வக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்துள்ளார். அவர் கடந்த 30.09.2016ஆம் தேதி முதல் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். எதிரி-3 திரு.எஸ்.ரவிச்சந்திரன் என்பவர் கடந்த 30.06.2017 முதல் 10.06.2018 வரை கந்தர்வக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்துள்ளார். அவர் கடந்த 31.01.2019ஆம் தேதி முதல் பணி ஒய்வில் உள்ளார். எதிரி-4 திரு.கு.ஆறுமுகம் என்பவர் கடந்த 11.06.2018 முதல் 11.09.2018 வரை கந்தர்வகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்துள்ளார். தற்போது திருச்சி மாவட்ட ஊராட்சி செயலராக பணிபுரிந்து வருகிறார். எதிரி-5 திரு.எஸ்.எஸ்.வி.ஏ.மகாலிங்கம் என்பவர் கடந்த 12.09.2018 முதல் 08.03.2019 வரை கந்தர்வகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்துள்ளார். தற்போது திருச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக (தேர்தல்) பணிபுரிந்து வருகிறார். எதிரி-6 திரு.து.குமரன் என்பவர் கடந்த 09.03.2019 முதல் 19.05.2020 வரை கந்தர்வகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்துள்ளார். தற்போது ஆவுடையார்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஆக பணிபுரிந்து வருகிறார். எதிரி-7 திரு.என்.காமராஜ் என்பவர் கடந்த 10.10.2015 முதல் 31.12.2017 வரை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். தற்போது கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்து வருகிறார். எதிரி-8 திருமதி.ரெ.சண்முகாதேவி

AWAAS YOJANA-GRAMIN (PMAY-G) திட்டமாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டமானது ஊராட்சி மன்றத்தலைவர் இல்லாத காலகட்டத்தில், தனி அலுவலர்களாக செயல்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள், அந்தந்த ஊராட்சியில் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் பயனாளிகளை சமூக பொருளாதார கணக்கெடுப்பு-2011ன்படி SECC (Social Economic Caste Census) சர்வே எடுத்து, வீடு கட்டுவதற்குரிய திறன் பயனாளிகளிடம் உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னர், வீடு கட்டுவதற்குரிய திறன் கொண்ட பயனாளிகளை தேர்வு செய்து, அவர்களின் வங்கி கணக்கு, MGNREGS job card, ஆதார் எண் மற்றும் பயனாளியின் தொலைபேசி எண் போன்ற விபரங்களை அவாஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து மத்திய அரசின் ஒப்புதல் பெறப்படுகிறது. இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு பயனாளிக்கும் கடந்த 2016-2017ஆம் நிதியாண்டிலிருந்து பணம் ரூ.1,70,000/- வழங்கப்பட்டு வருகிறது. இதில் 75 சதவீத தொகை மத்திய அரசாங்கமும், 25 சதவீத தொகை மாநில அரசாங்கமும் வழங்குகிறது. அதன்பின்பு தேர்வு செய்யப்பட்ட நபர்கள் வீடு கட்டுவதற்கு நான்கு நிலைகளில் ரூ.1,20,000/- வரை பணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, கூடுதலாக ரூ.50,000/- மதிப்பு பெறுமானமுள்ள கட்டுமான பொருட்களான சிமெண்ட், கம்பி, கதவு மற்றும் ஜன்னல் ஆகியவை கட்டிடத்தின் ஒவ்வொரு நிலையிலும் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. அதன்படி ஒன்றிய பணி மேற்பார்வையாளர், ஊராட்சி செயலாளருடன் சேர்ந்து பயனாளியின் இடத்தை பார்வையிட்டு, அளந்து கோடிட்டு கட்டிடம் கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன்பிறகு வீட்டின் ஒவ்வொரு நிலைக்கும் ஒன்றிய பணி மேற்பார்வையாளரால் அளவுகள் குறிக்கப்பட்டும், ஒன்றிய பொறியாளரால் அளவுகள் சரிபார்க்கப்பட்ட பிறகு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் ஒவ்வொரு நிலைக்கும் உள்ள தொகையினை பொது நிதி மேலாண்மை முறை மூலம் சம்மந்தப்பட்ட பயனாளியின் வங்கி கணக்கிற்கு FTO முறையில் தொகை செலுத்தப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் சம்மந்தப்பட்ட ஒன்றிய பணி மேற்பார்வையாளர் பயனாளி வீடு கட்டும் ஒவ்வொரு நிலையையும், அதாவது Existing site (old House), Proposed site, Basement, Lintel level, Roof level ஆகிய நிலைகளில் பயனாளியை நிற்க வைத்து Mobile App (Awaas app)-ல் GEO TAG மூலம் போட்டோ எடுத்து ஆவாஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேற்படி திட்டத்தின்கீழ் பயனாளி வீடு கட்டி முடிக்கப்பட்டுள்ளதா என வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குளத்தூர் ஊராட்சியில் கடந்த 2014-2015ஆம் நிதியாண்டில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் (IAY) கீழ் குளத்தூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த 1) திரு.சாமிநாதன் த/பெ. அய்யாவு, கீழ உளவயல் 2) திரு.ராஜா த/பெ. தங்கராசு, குளத்தூர் நாயக்கர்பட்டி ஆகியோர்கள் வீடு கட்டாமலேயே, வீடு கட்டிமுடித்ததாகவும் அதற்குரிய சிமெண்ட் மற்றும் கம்பி ஆகியவை

என்பவர் கடந்த 01.01.2018 முதல் 20.11.2019 வரை கந்தர்வக்கோட்டை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். தற்போது கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்–1) ஆக பணிபுரிந்து வருகிறார். எதிரி–9 திரு.எஸ்.மயில்வாகணன் என்பவர் கடந்த 22.11.2019 முதல் தற்போது வரை கந்தர்வக்கோட்டை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்து வருகிறார். எதிரி–10 திரு.எம்.இளங்கோ என்பவர் கடந்த 01.04.2014 முதல் 22.09.2016 வரை கர்ந்தவக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வந்தவர், கடந்த 30.06.2017ஆம் தேதி பணி ஒய்வு பெற்றுள்ளார். எதிரி–11 திரு.எம்.சிவபிரகாசம் என்பவர் கடந்த 23.09.2016 முதல் 28.02.2019 வரை கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வந்துள்ளார். கடந்த 07.08.2019ஆம் தேதி முதல் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். எதிரி–12 திரு.ஜி.சுரேஷ் என்பவர் கடந்த 05.12.2011 முதல் 30.06.2017 வரை கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் குளத்தூர் ஊராட்சியில் ஒன்றிய பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்துள்ளார். தற்பொழுது கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் அரியாணிபட்டி ஒன்றிய பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார். எதிரி–13 திரு.சை.சபியுல்லா என்பவர் கடந்த 01.07.2017 முதல் 03.05.2020 வரை கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்துள்ளார். தற்போது பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார். எதிரி–14 திரு.ராஜமாணிக்கம் என்பவர் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி செயலாளராக கடந்த 01.04.2014 முதல் தற்போது வரை பணிபுரிந்து வருகிறார். எதிரி–15 திரு.சி.மகாதேவன் என்பவர் கடந்த 25.10.2011 முதல் 24.10.2016 வரை குளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக பணிபுரிந்துள்ளார்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டமானது (IAY) மத்திய அரசின் நிதியில் இருந்து, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு வீடு கட்ட கட்டுமான பொருட்களும், நிதியும் வழங்கப்படுன்றன. இத்திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பயனாளிக்கும் கடந்த 2014–2015ஆம் நிதியாண்டில் பணம் ரூ.1,20,000/– வழங்கப்பட்டது. இதில் 75 சதவீத தொகை மத்திய அரசாங்கமும், 25 சதவீத தொகை மாநில அரசாங்கமும் வழங்குகிறது. மேலும் ஒவ்வொரு பயனாளிக்கும் வீடு கட்டுவதற்கு 60 மூட்டை சிமெண்டும், 155 கிலோ இரும்பு கம்பியும் வழங்கப்பட்டு, கட்டுமான பொருட்களுக்கு வழங்கியது போக மீதமுள்ள தொகை பயனாளிகள் வீடு கட்டி முடிக்கும் வரை மூன்று பட்டியல்களாக தயார் செய்யப்பட்டு, அதற்கான தொகையை ஊராட்சி மன்றத் தலைவரால் காசோலையாக பயனாளிக்கு வழங்கப்படுகிறது. மேற்கண்ட இந்திரா நினைவு குடியிருப்பு திட்டமானது கடந்த 2016–2017ஆம் நிதியாண்டிலிருந்து பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா PRADHAN MANTRI

வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிரிகள் 1, 2, 12, 14 மற்றும் 15 ஆகியோர் பொய்யான ஆவணங்களை தயார் செய்து, மேற்கண்ட பயனாளிகளின் வீடு கட்டுவதற்கான தொகை ரூ.2,40,000/–ஐ கையாடல் செய்துள்ளார்கள். மேலும் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா PRADHAN MANTRI AWAAS YOJANA-GRAMIN (PMAY-G) திட்டத்தின் கீழ் கடந்த 2017–2018ஆம் நிதியாண்டில் குளத்தூர் பஞ்சாயத்தைச்சேர்ந்த 1) திரு.சிவக்கொழுந்து, த/பெ.ராமன், கோவில்பட்டி என்ற பயனாளிக்கும், கடந்த 2018–2019ஆம் நிதியாண்டில் 2) திரு.முத்துசாமி த/பெ. வளத்தான், கோவில்பட்டி 3) திருமதி.ராதாம்மாள், க/பெ.அய்யாவு, குளத்தூர் நாயக்கர்பட்டி என்ற பயனாளிகளுக்கும், கடந்த 2019–2020ஆம் நிதியாண்டில் 4) திரு.முருகேசன் த/பெ. சாமிநாதன், குளத்தூர் நாயக்கர்பட்டி 5) திரு.ரவிச்சந்திரன், த/பெ.மலையப்ப உடையார், குளத்தூர் நாயக்கர்பட்டி 6) திரு.துரைராஜ், த/பெ.ரெத்தினம், சேவியர்குடிகாடு 7) திருமதி.செல்லம்மாள், க/பெ.ரெங்கசாமி, சேவியர்குடிகாடு 8) திரு.பழனிவேல், த/பெ.நடேசன், குளத்தூர் நாயக்கர்பட்டி ஆகிய பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான சிமெண்ட் மற்றும் கம்பி ஆகியவை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் அந்த வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியும் சம்மந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் திரு.மதி த/பெ. கோவிந்தராசு என்பவர் கடந்த 2014–2015ஆம் நிதியாண்டில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் (IAY) கீழ் வீடு கட்டி பயனடைந்துள்ளார். ஆனால் அவருக்கு 2016–2017ஆம் நிதியாண்டில், பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் 9) திரு.மதிவாணன் த/பெ. கோவிந்தராசு என்ற பெயரில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான தொகை அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு பயனாளிக்கு ஒரு திட்டத்தின் கீழ் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடு கட்டி முடிக்கப்பட்டிருந்தால், அந்த நபரை வேறு திட்டத்தின் கீழ் பயனாளியாக தேர்வு செய்யக்கூடாது. ஆனால் திரு. மதி த/பெ. கோவிந்தராசு என்ற பயனாளியை இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களிலும் பயனாளியாக தேர்வு செய்யப்பட்டு நிதி வழங்கியதாக காட்டப்பட்டுள்ளது. ஆனால் அவர் கடந்த 2014–2015ஆம் நிதியாண்டில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் (IAY) கீழ் கட்டிய வீட்டை தவிர வேறு வீடு கட்டவில்லை. எனவே மேற்கண்ட திட்டத்தின் கீழ் 9 பயனாளிகள் பெயரை பயன்படுத்தி அவர்கள் வீடு கட்டாமலேயே, வீடு கட்டி முடித்துள்ளதாக எதிரிகள் 3 முதல் 14 வரை உள்ளவர்கள் பொய்யான ஆவணங்கள் தயார் செய்து மேற்கண்ட 9 பயனாளிகளின் வீடு கட்டுவதற்கான தொகை ரூ.15,30,000/–ஐ கையாடல் செய்துள்ளார்கள். எனவே எதிரிகள் 1, 2, 12, 14 மற்றும் 15 ஆகியோர் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கும், எதிரிகள் 3 முதல் 14 வரை உள்ளவர்கள் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் 9 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 11 பயனாளிகள் வீடு கட்டுவதற்கான மொத்த தொகை ரூ.17,70,000/– (2,40,000+15,30,000) ஐ வீடு கட்டாமல், வீடு

'கட்டியதாக பொய்யான ஆவணங்கள் தயார் செய்து அரசு நிதியை கையாடல் செய்துள்ளதாக, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரகத்திற்கு அனுப்பப்பட்ட விழிப்பு அறிக்கையின் (Vigilance Report) அடிப்படையில் சென்னை இயக்குனரக குறிப்பாணை எண். VR.No.640/2021/RDP/PK, நாள்.01.02.2022-ன்படி மார்ஜீனில் கண்ட எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய வழங்கப்பட்ட உத்தரவின்படி இன்று 21.02.2022 மாலை 16.30 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண். 01/2022 சட்டப்பிரிவுகள். 465, 466, 468, 471, 477, 477(A), 167, 409, 420 IPC and u/s 13(1)(c) r/w 13(2) of Prevention of Corruption Act-1988 and u/s 13(1)(a) r/w 13(2) of Prevention of Corruption (Amendment) Act-2018 ன்படி மார்ஜீனில் கண்ட எதிரிகள் 1 முதல் 15 வரை உள்ளவர்கள் மீது என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், அரசாணை எண் 3(D) No.18 Rural Development and Panchayat Raj (E2) Department, Dated.24.06.2021 and Proceedings RC No.4899/2021/A3 (Pts) of the District Collector Pudukkottai Dated. 20.10.2021 ஆகியவற்றின் நகலை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ தனி நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பியும், மற்றொரு நகல் நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

21.02.2022.
(அ.மீட்டர்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
புதுக்கோட்டை.